Registered as a News paper in Ceylon விலைசதம் 15 ★ ★

JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY
26 JUL 1972

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 1;
இதழ் 165

யாழ்ப்பாணம் ஆடி 10 ரபி; அவ்வல் 13 செவ்வாய்க்கிழமை, (25-7-72)

ENGLISH
PUDLO
WATER PROOF CEMENT
Price Rs. 3/50 per lb.

பட்லோ சிமெந்து
விலை: இரு ரூபா 3/50
கிடைக்குமிடம்:
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

## கேகாலை மலை அடிவாரத்தில்

# கிராம சேவகரை கத்தியால் குத்திக் கொன்றார்களாம்

## குற்றவியல் கமிஷன் முன் 5 பேர் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, திங்கள் பமுனுகரவாதில் நடவடிக்கைகளின் போது கேகாலைப் பகுதியில் ஒரு கிராமசேவகரும் அவரது உதவியாளர்களும் எப்படி கொலைசெய்யப்பட்டார்கள் என்பது பற்றி உதவி சொலிசிட்டர் ஜெனரல் கொலின் தோமே இன்றுகாலையில் குற்றவியல் நீதிக் கமிஷன் முன்னிலையில் விபரித்தார்.

கிராமசேவகரையும் அவரது சகாக்களையும் ஒருமலைப் பகுதிக்கு பமுனுகரவாதில் கடத்திச் சென்றனர் என்றும் அங்கு அவர்கள் கொலை செய்யப்படவேண்டும் என்று உத்தரவிட்டனர் என்றும் பின்னர் மலையின் அடிவாரத்துக்கு அவர்கள் கொண்டுபோகப்பட்டனர் என்றும்சொலிசிட்டர்ஜெனரல் கூறினார்.

கிராமசேவகரையும் மற்றும் 3 வரையும் கொலை செய்தார்கள் என்று சமரசிங்க, விஜயபெரினண்டோ எனியன்ராகுல, பீரிஸ சோமே, ஜோர்ஜ் பெரேரா ஆகிய ஐவர் மீதும் குற்றஞ் சுமத்தப்பட்டது.

குற்றவியல் நீதிவிசாரணைக் கமிஷன் இன்று கூடிய பொழுது உதவி சொலிஸ்ரர் ஜெனரல் கொலின்ஸ் தோமே தொடர்ந்து கூறுகையில், நாட்டில் பமுனுகரவாதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கிராமத்தை கண்காணிக்கும் பொறுப்பை கிராமசேவகரும் மற்றும் மூவரும் ஏற்றனர். இவர்கள் இரவில் கண்காணித்து வந்தனர்.

வரக்காபொல பொலிஸ் நிலையத்தைத் தாக்கவந்த பமுனுகரவாதிகள் அதை கைவிட்டு திரும்பிவந்தனர். அப்பொழுது அவர்களிடம் இயந்திரத் துப்பாக்கி, சுழல் பிஸ்ரல்கள் இருந்தன. இவர்கள் திரும்பி வரும்பொழுது இவர்களிடம் கிராமசேவகரும் மற்றவர்களும் அகப்பட்டுக் கொண்டனர். கிராமசேவகரும் மற்றவர்களும் பமுனுகரவாதிகளினால் ஹரக்கமுவ மலை அடிவாரத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அங்கு வைத்து காலை 4 மணியளவில் கொலைசெய்யப்பட வேண்டுமெனத் தலைவர் உத்தரவிட்டார்.

அப்பொழுது குளியாப்

[8ம் பக்கம் பார்க்க]

## பருப்பு - கடலை விலைகள் ஏறும்?

கொழும்பு, திங்கள் பருப்பு மற்றும் கடலை வகைகள் யாவினதும் சில்லறை விலைகள் விரைவில் அதிகரிக்கப்படலாம் என்று கருதப்படுகின்றது.

பருப்பின் உலகச் சந்தை விலை பெருமளவில் அதிகரித்திருப்பது பற்றி உணவு இலாகா அதிகாரிகள் அரசாங்கத்திடம் முறையிட்டுள்ளனர். பருப்பு வகைகள் மானியமுறையில் விநியோகிக்கப்படுவதின் காரணமாக வருடந்தோறும் ரூபா 1,500,000 நஷ்டம் ஏற்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒருநபருக்கு மாதம் அரை ரூத்தல் பருப்பு வீதம் பங்கீட்டு முறையில் விநியோகிப்பதற்கு வருடத்தில் 50,000 தொன் பருப்புத் தேவைப்படுகின்றது. உழுந்து போன்ற பருப்பு வகைகளின் விலைகள் அதிகரிக்கப்படுமானால் பப்படம் விலையும் ஏறக்கூடுமென்று கூறப்படுகிறது.

### கும்பாபிஷேகம்

அல்லைப்பிட்டி, திங்கள் வேலணை வங்களாவடி முருகன் ஆலயம் கட்டிட வேலைகள் பூர்த்தியடைந்து வருகின்றன. பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் உருவாகிவரும் இவ்வாலய வேலைகள் முடிவடைந்ததும் கும்பாபிஷேகம் நடைபெறும்.

## பஸ்ஸில் பெண்ணின் தாலிக்கொடி அபேஸ்!

யாழ்ப்பாணம், செவ். பஸ்ஸொன்றில் பெண்ணின் தாலிக்கொடி திடீரென அபேஸாகிவிட்டது. பஸ் ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்த பெண்மணியின் தாலிக்கொடியே இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டது.

அனுராதபுரத்திலுள்ள கொனேவா என்ற இடத்தில் பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது மிதிபலகையில் நின்று கொண்டிருந்த பிரயாணி ஒருவரே இப் பெண்ணின் தாலிக்கொடியை லாவகமாக அறுத்துக் கொண்டு பாய்ந்து ஓடிவிட்டதாக பொலிஸில் செய்யப்பட்ட புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி செல்லம்மா நடராசா என்ற பெண்மணியின் தாலிக்கொடியே இவ்வாறு பறிபோனது.

அனுராதபுரம் பொலிசார் தேடுதல் வேட்டை நடத்துகின்றனர். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

யாழ். கைக்குண்டு வீச்சு வழக்கு

## 1-ம், 2-ம் எதிரிகள் பிணையில் சென்றனர்; மற்றையோர் விடுதலை

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் கைக்குண்டு வீச்சு வழக்கில் 1-ம், 2-ம் எதிரிகளை 1 வருட நன்னடத்தைப் பிணையில் செல்லும்படியும் காயமடைந்தவருக்கு ஒவ்வொருவரும் 500 ரூபா நஷ்டஈடு வழங்கும்படியும் நீதியரசர் தீர்ப்பளித்தார்.

4-ம் எதிரி எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலைசெய்யப்பட்டார். மற்றும் 6 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் வாபஸ் பெறப்பட்டதைத் தொடர்ந்து விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ்கோட்டில் நீதியரசர் ஜெயராமச்சந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையைப் பார்ப்பதற்கு மாணவர்கள் உட்பட ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

இவ்வழக்கில் 68-ம் ஆண்டு செப்டம்பர் 22-ந் தேதி யாழ்ப்பாணம் கோவில் வீதியில் இருந்த செல்லத்துரை. பொன்ராசா சுவாம்பிள்ளை, குலசேகரம் சுவாம்பிள்ளை, செல்லத்துரை மகேந்திரராசா, பொன்னுத்துரை அன்ரன், வின்சன் டேவிட், கனகரத்தினம் செல்லத்துரை, குமார் பொன்னுத்துரை, மாசிலாமணி செல்லத்துரை ஆகியோர் சட்டவிரோதமாகக் கூடியதாகவும், பிகிலீஸ் என்பவருக்கு கைக்குண்டு வீசி கொலை செய்ய முயற்சித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

[8ம் பக்கம் பார்க்க]

**வெலிங்டன் சினிமா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி - பத்மினி
நடித்த
**காவல் தெய்வம்**
தினசரி காலை 4-30
THE SERGENT

**பவானி சினிமா**
(முகாம்)
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30 மெட்னி
ஜெமினி-வாணிஸ்ரீ
நடித்த
**தபால்காரன் தங்கை**

**ராணி** (யாழ்ப்பாணம்)
ஜெமினி—பத்மினி நடித்த
தினசரி 4 காட்சிகள்
**மல்லிகா**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
ராஜேந்திரகுமார் வைஜயந்திமாலா நடித்த
தினசரி 4 காட்சிகள்
**GANWAAR**
கவார்
(ஈஸ்ட்மென் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
எம்.ஜி. ஆர்-சரோஜாதேவி நடித்த
தினசரி 4 காட்சிகள்
**குடும்பத் தலைவன்**
29 ம் திகதி முதல்
**பத்தாம் பசலி**

இப்பொழுது திரையிடப்படுகிறது
**வெலிங்டன்** (யாழ். நகர்) **லிடோ**
தினசரி 2-30, 6-30, 10-00
சனி, ஞாயிறு 10-30
தினசரி காலை 10-00
பி. ப. 2-30, மாலை 6-00
இரவு 9-30
மற்றும்
**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா**
★ சிவாஜி
★ சரோஜாதேவி
★ முத்துராமன்
★ லக்ஷ்மி
★ சோ
மனோரமா
அஞ்சலிதேவி
நடித்த
முத்தர் பிலிம்ஸ்



**அருணோதயம்**
டைரக்ஷன்: வி. சினிவாசன்
இசை: கே. வி. மகாதேவன்


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சாப்டிங் 7 தொடக்கம் 7 அங்குலம்வரைக்கும் (M. S. Shafting) வேண்டிய அளவுகளில் மலிவாகக் கிடைக்கும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4858

### தேவை

15 வயதிற்கு உட்பட்ட வாலிபர் சர்வோர் வேலைக்கு தேவை. விண்ணப்பிக்கவும்! விளம்பர இல. 4899 C/o "ஈழநாடு", யாழ்ப்பாணம். 4899

ஜீ. சீ. ஈ. சாதாரண வகுப்பு மாணவருக்கு வர்த்தகம், கணக்கியல் பொருளாதாரம் ஆகிய பாடங்கள் படிப்பிக்கத்தக்க ஆசிரியர் ஒருவர் தேவை. தெ. இ. ஜுபரத்தினம் தெல்லிப்பழை 4896


**யாழ் தியேட்டர்**
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
SEVEN GOLDEN MEN
STRIKE AGAIN

MANOHARA
Jaffna
Daily 4-45, 7& 9-45 pm
Sat. Sunday 10-30
Eli Wallach
in
ACE HIGH
(Techni color)

REGAL (Jaffna)
Daily 5-15& 7-15 p m.
Dona'd Sutherland and
Elliott Gould
in
MASH
(Panavision color)
தினசரி 2-00, இரவு 9-45
மாலினிக்-பண்டரிபாய்
நடித்த
மாலையிட்ட மங்கை

**சாந்தி**
சுன்னாகம்
தினசரி 6-30, 9-45
சிவாஜி-வரலக்ஷ்மி
நடித்த
**ஹரிச்சந்திரா**

**நியூ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு பி ப 2-30
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ
நடித்த
**மனச்சாட்சி**

**நாகம்ஸ் சினிமா**
சுன்னாகம்
தினசரி 6-30 இரவு 9-45
சனி ஞாயிறு 2-30
ஆனந்தன்-கே. ஆர். விஜயா
நடித்த
**தாயின்மேல் ஆணை**


### வைத்தியம்

ஹோமியோ வைத்தியம்: வடஇலங்கை ஹோமியோபதி சங்கத்தின் முத்திங்கள் வெளியீடு. ஹோமியோபதி டாக்டர்களின் மதிப்புயலும் பிரசுரமாகும். வருடச் சந்தா ரூபா 5/-. விபரங்களுக்கும் விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும். 131, நாவலர்வீதி, (ஐந்து சந்தி) யாழ்ப்பாணம். 4878

யாழ். ஹோமியோபதி கிளினிக் - சகல நோய்களுக்கும் ஜேர்மன் ஹோமியோபதி மருந்துகள் நிரந்தர நிவாரணமளிக்கின்றன. கல்கத்தாவில் பட்டம் பெற்று நாடு திரும்பியுள்ள டாக்டரை இன்றே நாடுங்கள். 35, சப்பல்வீதி, (முதலாம் குறுக்குத் தெருச் சந்தி.) யாழ்ப்பாணம். 4864

### கல்வி

G. C. E. (சாதாரணம்) பின்னேரங்களிலும், சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் கணித - விஞ்ஞான பாடங்களில் மீட்டல் வகுப்புகள் ஆரம்பம். இறுவன் போதனா நிலையம் 8, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் 4883

## புதியவழக்கறிஞர்

காரைநகர் [illegible], திங்கள்

சரவணைக் கிராமத்தைச் சேர்ந்த திரு. எம். சண்முகநாதன் உயர்நீதிமன்ற வழக்கறிஞராக நீதியரசர் திரு. ரி. டபிள்யூ. இராசரத்தினம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

சட்டக் கல்லூரியில் பயின்ற காலத்தில் இவர் தமிழ்மன்றத் தலைவராகவும் "நீதிமுரசு" ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

சரவணை சேவா மன்றத்தின் பொதுக் காரியதரிசியாகக் கடமையாற்றிவரும் இவர் காரைநகர் புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவராவார்

## 'மூடப்பழக்கங்கள் ஒழியவேண்டும்'

அல்லைப்பிட்டி, திங்கள்

அகில இலங்கை இந்துமத குருபீட தலைவர் திருக்கூட்டத்தினர் தமிழ்நாட்டு இந்துசமய ஆண்டறிக்கையை வெளியிட்டுள்ளனர்

இவ்வறிக்கையில் மக்கள் தெய்வ வணக்கத்தால் பல துறைகளில் செல்வம், சமநீதி, அன்பு உடையவர்களாய் வாழ்வார்கள் என்றும் நல்வாழ்விற்குத் தடையாய் இருக்கும் மூடப் பழக்க வழக்கங்கள் எக்காலத்தில் யார், யாரால் ஏற்படுத்தப் பட்டவையாயினும் அவற்றை விரைவில் ஒழித்து சந்தோஷ சமாதான சாந்தியுடன் வாழவேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: உலகின் முன்னோடி நாடாகிய பாரதத்தின் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சகிக்க முடியாத தோல்விகளிலும் நிலைகுலையாது செயற்கரிய

### சங்க ஏல விற்பனை

தேசிய வெற்றிலை [illegible] சபையினால் வேண்டப்படாத கீழ்க்காணும் பொருட்கள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் யாழ்ப்பாணம் சங்க இலாகாவில் 1972 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும். ஏல விற்பனையின் முழு நிபந்தனைகளும் 1954 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் No. 10675 (பகுதி I தொகுதி II) விளக்கப்பட்டுள்ளது.

படுக்கை விரிப்புகள்.
சாரங்கள்.
மடிச்சேலைகள்.
நூல் சேலைகள்.
பட்டுவேட்டிகள்;
நூல்வேட்டிகள்.
இமிடேசன் நகைகள்.
மணிக்கூட்டு சாமான்கள்.
43 இருத்தல் வெள்ளி.
வாகனவி உபகரணங்கள்.
இவற்றுடன் பழுதடைந்த நிலையிலுள்ள பாவிக்கக் கூடிய பலவகையான சேலைகளும் விற்கப்படும்.

எஸ். எம். ஜே. சேனாரத்ன
உதவி கமிஷனர் [illegible]
யாழ். மாவட்டம்.
சங்க இலாகா,
யாழ்ப்பாணம்.
22-7-72. 4309

சாவகச்சேரித் தொகுதி

## பெ. ஆ. ச. சம்மேளனம் தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்.

சாவகச்சேரித் தொகுதிப் பெற்றோர் - ஆசிரியர் சங்க சம்மேளனம் அதன் தலைவர் திரு எஸ் வல்லிபுரம் தலைமையில் அண்மையில் சாவகச்சேரியில் கூடியபோது சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் 68 சங்கங்கள் தத்தம் பாடசாலைகளின் தேவைகளைச் சுட்டியிருந்தன தனிப்பட்டமிருந்த பாடசாலைகளை அரச பொறுப்பேற்ற காலத்திலிருந்து கவனிக்கப்படாத பாடசாலைகளின் தேவைகள்பற்றி முதலில் பரிசீலிப்பதென்றும் பொதுவாக எல்லாப் பாடசாலைகளின் குறைபாடுகள்பற்றியும் இம்மாதம் 31ம் திகதி சம்மேளனம் கூடி ஆராய்ந்து கல்வி இலாகாவின் கவனத்திற்குக் கொண்டுவருவதென்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

புத்தூர், திங்கள்

புத்தூர் மேற்கு திருமண மாளவர்களுக்கும் திருமண மாதர்களுக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான சமபந்தாட்டப்போட்டியில் திருமணமானவர்கள் வெற்றியீட்டினர். புத்தூர் கிராம சபைத் தலைவர் திரு. மு திருநாவுக்கரசு போட்டிக்குத் தலைமைவகித்தார்

சாதனைகள் புரிந்து வெற்றி வாகை சூடியவர்களைமுன்னிட்டு பாராட்டுதல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**போயா தினத்தையொட்டி இன்று சினிமாக்காட்சிகள் இல்லை**

# கம்யூனிஸ்ட் படைகள் மீது விஷக்குண்டுகளை அமெரிக்கர் வீசுகிறார்களாம்

## வடக்கில் விமானத் தாக்குதல் தீவிரம்

சைகோன், ஜூலை 24 வடவியட்நாம் மீதான விமானத் தாக்குதல்களை அமெரிக்கர்கள் வலுப்படுத்தியுள்ளனர்.

கடந்தவார இறுதியில் வடவியட்நாம் தலைநகர் மற்றும் சுற்றுப்புறப் பகுதியில் இடைவிடாமல் அமெரிக்கர் குண்டுகளை வீசினார்கள் என்று வடவியட்நாமியர் அறிவித்துள்ளனர்.

ஒருமணிநேர இடைவெளிக்குள் வடவியட்நாம்மீது 20 தடவைகள் 20 இடங்களில் அமெரிக்க விமானங்கள் ஆளில் ஆகாச எந்த குண்டு வீசித் தாக்கிய சம் ஹனோயிலிருந்து ஒலி நிருபர் அறிவித்துள்ளார்.

வெடிகுண்டு கிடங்குகள், கப்பற்துறைகள், எழுதுவார்க்கும் இடங்கள், பாலங்கள் முதலியவற்றை இலக்கு வைத்து குண்டு வீசப்பட்டதாக அமெரிக்க ராணுவத் தலைமைப் பீடம் அறிவித்தது. ஆனால் தொழிற்சாலைகள் மீதும் பொதுமக்கள் வாழும் இடங்கள் மீதும்கூட அமெரிக்கர்கள் குண்டு வீசி நாசம் புரிந்துள்ளதாக வடவியட்நாமியர் அறிவித்துள்ளனர். ஏராளமான சிவிலியன்கள் கொல்லப்பட்டும் காயமடைந்துமுள்ளனர் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆறு அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குவான்ரீ பகுதியிலும் விடுதலை முன்னணிப் படைகள் முகாமிட்டுள்ள ஏனைய பகுதிகளிலும் அமெரிக்கர்கள் கம்யூனிஸ்ட்கள் மீது விஷவாயுக் குண்டுகளை வீசிவருவதாக பாரிஸ் அமைதிப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் தென்வியட்நாம் புரட்சி அரசாங்க பேச்சாளர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

## கேணல்கடாபி மறுப்பு

பெய்ரோ, ஜூலை 24 லிபியாவின் கேணல் கடாபியின் ஆட்சிபீடத்தில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக முன்பு வெளிவந்த செய்திகளை அவர் மறுத்திருக்கிறார்.

அப்படி எதுவித நெருக்கடியும் தோன்றவில்லையென்றும் பிரதமர் பதவிக்கு ராணுவ அதிகாரி ஒருவரை நியமிப்பதில் தாமதம் ஏற்படவில்லையென்றும் கேணல் கடாபி அறிவித்திருக்கிறார்.

## ஒரிஸாவுக்கு ஒரு லட்சம் ரூபாய்

புதுடில்லி, ஜூலை 24 ஒரிஸாவில் ஏற்பட்டுள்ள வெள்ளக் கஷ்டங்களின் காரணமாக நிவாரண உதவிக்கென பிரதமர் திருமதி இந்திராகாந்தி பிரதமர் நிதியிலிருந்து ஒருலட்சம் ரூபாய் வழங்கியுள்ளார்.

## இந்திராவை கருணாநிதி சந்தித்தார்

புதுடில்லி, ஜூலை 22 தமிழ்நாடு முதல்வர் திரு. மு. கருணாநிதி நேற்று பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்து சுமார் 15 நிமிடங்கள் பேசிக்கொண்டிருந்தார்.

தமிழ் நாட்டில் சமீபகாலத்தில் ஏற்பட்ட விவசாயிகள் கிளர்ச்சி பற்றியும் பின்னர் ஏற்பட்ட சமரச முடிவுகள் பற்றியும் அவர் பிரதமருடன் கலந்துரையாடியதாகத் தெரிகிறது.

மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக திரு கருணாநிதி புதுடில்லிக்கு வந்திருந்தார்.

## மருந்துகள் விநியோகம்

அக்கரைப்பற்று, திங்கள் அகில இலங்கை சித்த வைத்திய சங்கம் சுதேச வைத்தியர்களுக்குத் தேவையான கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூப்போன்ற விலையுயர்ந்த மருந்துப் பொருட்களை ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபன மூலம் பெற்று விநியோகித்து வருகின்றது.

மேற்படி மருந்துகளைப் பெறவிரும்பும் பதிவுபெற்ற வைத்தியர்கள் மேற்படி சங்க அதிகாரியிடம் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

## பாதுகாப்புசபை உத்தரவை இஸ்ரேல் நிராகரித்தது

டெல் அவிவ், ஜூலை 24 இஸ்ரேலியர் சிறைப்பிடித்து வைத்துள்ள 6 சிரிய-லெபனான் ராணுவ அதிகாரிகளையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென ஐ. நா. பாதுகாப்புச்சபை ஒரு தீர்மானமூலம் விடுத்த உத்தரவை இஸ்ரேல் நிராகரித்து விட்டது.

சில வாரங்களுக்கு முன் லெபனான் எல்லையில் வைத்து இந்த ராணுவ அதிகாரிகளை இஸ்ரேலியர் சிறைப்பிடித்துச் சென்றனர். இவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டுமென்று பாதுகாப்புச் சபை தீர்மானம் ஒன்றின் மூலம் இஸ்ரேலை வற்புறுத்தியிருந்தது. இதுபற்றி இஸ்ரேலிய மந்திரிசபை விரிவாக ஆராய்ந்த பின்னர் பாதுகாப்புச் சபையின் உத்தரவை நிராகரிப்பதென்று முடிவு செய்தது. அரபுநாடுகளில் சிறை வைக்கப்பட்டுள்ள இஸ்ரேலியர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமென கோரப்பட்டிருப்பதுடன் இது சம்பந்தமாக அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## எம்.பி. தந்தி

பருத்தித்துறை, திங்கள் பருத்தித்துறைக்கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் திரு. எஸ். சந்தப்பிள்ளையின் இடமாற்றத்தை எதிர்த்து பருத்தித்துறை ஆங்கிமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் கல்வி அமைச்சருக்குத் தந்தி அனுப்பியுள்ளார். இத்துடன் இருநூறு பெற்றோர் கைச்சாத்திட்ட மகஜர் ஒன்றும் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாணவரும் வடமாநிலக் கல்வி அதிபரும் இதுவிடயம் பற்றி மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிகிறது.

## புலமைப் பரிசில் பரீட்சை

பருத்தித்துறை, திங்கள் இரண்டாந்தரக் கல்விப் படிப்பிக்கான மாணவரைத் தெரிவு செய்வதற்குரிய போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 5-ம் திகதி சனிக்கிழமை அகில இலங்கை ரீதியாக நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை கல்விப் பகுதியினர் மேற்கொண்டுவருகின்றனர். இப்போட்டியில் பரீட்சை ஒரு நாள்மட்டுமே நடைபெறும்.

## கட்டிடம்

கொழும்பு, திங்கள் இதுவரை காலமும் செனட்சபைக்கென ஒதுக்கப்பட்ட இடம் கடந்த 23-ம் திகதி முதல் 'குடியரசு சதுக்கம்' எனப் பெயர் மாற்றப்பட்டது.

அதேபோலவே செனட் கட்டிடம் என்ற பெயரும் குடியரசுக் கட்டிடம் என்று மாற்றப்பட்டுள்ளது.

## இருதடவைகளில் நான்கு உபதேர்தல்கள்

கொழும்பு, திங்கள் இரத்தினபுரி - புத்தளம் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்கள் முன்னதாகவும் நாரம்மல - தெல்தெனிய இடைத்தேர்தல் பின்னர் ஒரு திகதியிலும் நடைபெறவிருப்பதாக அறியப்படுகின்றது.

இந்த இடைத் தேர்தல்களுக்கான திகதிகள் இன்னமும் அறிவிக்கப்படவில்லையாயினும் இரத்தினபுரி - புத்தளம் இடைத்தேர்தல்கள் செப்டம்பர் மாதமிறுதியிலும் மிகுதி அக்டோபர் மாத ஆரம்பத்திலும் இடம்பெறக்கூடும் என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த இடைத் தேர்தல்களை இரண்டுவேறு திகதிகளில் நடத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டதற்கு பாதுகாப்பு நோக்கங்களே காரணம் என்று சொல்லப்படுகின்றது.

இரத்தினபுரி இடைத்தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பில் திரு. நந்தா எல்லாவலயும் புத்தளத்தில் திரு. ஏ. ஏ. லத்தீப்பும் போட்டியிடுகிறார்கள். இவை பற்றிய இறுதி அறிவிப்பு இந்தவார இறுதியில் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் பற்றிய இறுதி விபரமும் இந்தவாரமே வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## லொறி மோதி தொழிலாளி மரணம்

அநுராதபுரம், திங்கள் வாண் பேக்கரி ஒன்றில் வேலைசெய்யும் தொழிலாளி ஒருவர் வேலைக்கு வரும் போது லொறி விபத்தில் சிக்கி பரிதாபமாக மாண்டார்.

இக்கோர சம்பவம் கடந்த 23-ம் திகதி அதிகாலை வவுனியா மூன்று முறிப்பு என்னும் இடத்தில் நடைபெற்றது. மூன்று முறிப்பைச் சேர்ந்த றணசிங்கா என்னும் 50 வயதான இந்தத் தொழிலாளியே இப்பரிதாப மரணத்துக்குள்ளானார்.

கொழும்பிலிருந்து பெற்றுப்பெட்டிகள் ஏற்றிவந்த லொறி, திரு. றணசிங்காவை மோதி சுமார் 25 யார் தூரத்தில் இருந்த தந்திக்கம்பத்தையும் மோதித் தள்ளி பக்கத்தில் நின்ற ஒரு பெருமரத்துடன் மோதி நொறுங்கியதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

திரு. றணசிங்கா விபத்து நடந்த இடத்திலேயே மரணமானார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த லொறியின் சாரதியான சுப்பிரமணியம் அபாயகரமான நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இந்த லொறியின் கிளீனர் குமார் எதுவித காயமும் இன்றி தப்பிக்கொண்டார்.

வவுனியா பொலிசார் இந்த விபத்து சம்பந்தமான விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

ஒளாலி

## சென். ஜேம்ஸ் உற்சவம்

எழுதுமட்டுவாள், செவ்வாய் இளவாலை சென். ஜேம்ஸ் தேவாலய உற்சவம் இன்று நடைபெறும் தேர்ப்பவனியுடன் முடிவடைகிறது. இன்று விசேஷ பூசையும் வேஸ்பரும் நற்பிரசாத சுற்றுப்பிரகாரமும் நடைபெறும். கடந்த 16-ம் திகதி இக்கோவில் உற்சவம் ஆரம்பமானது.

## விசேஷ திருவிழா

யாழ்ப்பாணம் செவ். யாழ்ப்பாணம் ஹமீதா ஒழுங்கை ஹமீதியா பள்ளிவாசல் நாகூர் ஆண்டவர் விழா 10 தினங்கள் நடைபெற்று கடந்த வெள்ளிக்கிழமையன்று கொடி இறக்கப்பட்டது. சனிக்கிழமை நடைபெற்ற விசேஷ திருவிழாவில் இந்தியாவைச் சேர்ந்த எம். எஸ். ஜமால் தீன் பாவா, பி. எம். நன்னு தீன் பாவா ஆகியோர் கலந்துகொண்டு நபிகள் நாயகம்பற்றிக் கதாப்பிரசங்கம் செய்ததுடன் அற்புதங்களும் நிகழ்த்திக் காண்பித்தனர். ஜனாப் ஐதுருஸ் ஆம் விழாக்களுக்குப் பொறுப்பாயிருந்தார்.

## கரைச்சிக் கிராமசபை

கிளிநொச்சி, திங்கள் இலங்கை வடக்கிலும் உள்ள கிராமசபைகளில் கரைச்சிக் கிராமசபையே தம்மிடம் அதிகமான மருந்துகளைப் பெற்றுக்கொள்வதாக நாவின்ன அரச ஆயுள்வேத மருந்துத் தொழிற்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மேற்படி கிராமசபை பரந்தன், வட்டக்கச்சி, உருத்திரபுரம் ஆகிய இடங்களில் மூன்று ஆயுள்வேத வைத்தியசாலைகளை நடாத்துகின்றது. இவ்வைத்தியசாலைகளுக்கே நாவின்னவிலிருந்து மருந்துகள் பெறப்படுகின்றன. மூன்று வைத்தியசாலைகளுக்கும் வருடாந்தம் இருபத்தையாயிரம் ரூபாவிற்கு மேற்பட மருந்துகள் செலவாகின்றன.

# நல்லூர் பஸ் தரிப்பில் பிரயாணிகள் அவதி!

## நாவலர் மண்டப பொறுப்பாளர் இப்படிக் கூறுகிறார்

20-7-72ம் திகதி "ஈழநாடு" பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த "நாவலர் மண்டபத்தில் சயிக்கிளுக்கு நேரும் கதி" என்னும் தலைப்பின் கீழ் திரு. கோகுநாதன் எழுதிய கடிதத்தை வாசித்தேன். அது எனக்கு மிகவும் வேதனையைக் கொடுத்தது.

கடந்த இரண்டு மாத காலமாக நல்லூர் பொலிசாரினதும் பொதுமக்களினதும் வேண்டுகோளின்படி நாவலர் மண்டப வளவுக்குள் சயிக்கிள் பாதுகாப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

கனோ தயக்கமாட்டேன்.

செ. செல்வராசா
நாவலர் மண்டபம் பொறுப்பாளர்
நல்லூர்.

......

## தபால் மூலம் தந்தி

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவு தந்திசேவை கடந்த நான்கு நாட்களாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. இங்குள்ளவர்கள் அனுப்பும் தந்திகள் தபால் மூலம் அனுப்பப்படுவதோடு அங்கிருந்து வரும் தந்திகளும் தபால்மூலமே இங்கு வருகின்றன. அவசர காரணமானவர்கள் புங்குடுதீவு சென்று தந்திகளை அனுப்புகிறார்கள்.

......

## நீரின்றிக் கஷ்டம்

நெடுந்தீவு திங்கள்

நெடுந்தீவு கிழக்கு 13ம் வட்டாரத்தில் குழாய்நீர் விநியோகிக்கும் பொருட்டு நிறுவப்பட்ட பைப் மூடப்பட்டுள்ளது. வரட்சி காரணமாக குடிதண்ணீர்ப் பஞ்சமாக இருக்கும் இவ்வேளையில் இப்பகுதி மக்கள் நீரின்றிப் பெரிதும் கஷ்டமடைகின்றனர்.

# கிருமிநாசினி அடித்தவர் மயங்கிவிழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

மிளகாய்ச் செடிக்கு கிருமிநாசினி அடித்துக்கொண்டிருந்தவர் மயங்கி வீழ்ந்து மரணமான சம்பவம் ஒன்று விசுவமடு படித்த வாலிபர் திட்டத்தில் நடைபெற்றுள்ளது.

அப்பகுதியைச் சேர்ந்த க. வேலாயுதபிள்ளை (வயது 23) என்ற இளைஞனே இவ்விதம் பரிதாப மரணத்துக்குள்ளானவராவர். மயங்கி விழுந்த குறிப்பிட்ட வாலிபனை கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு கடவுபாக எடுத்துச் சென்றனர். ஆயினும் சில மணி நேரத்தில் அவரது உயிர் பிரிந்தது.

கிருமிநாசினி தெளித்துக் கொண்டிருந்த வேலாயுதபிள்ளை மற்றவர்களுடன் மதிய போசனம் உண்டதாகவும், கிருமிநாசினி அடித்த பின்னர் கைகளைக் கழுவாமல் கறியையே அவர் சாப்பிட்டதாகவும் விசாரணையில் தெரியவந்தது. விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (கு. வி. ந)

# தொண்டை மண்டல ஆதீனம் அளித்துள்ள பட்டம்

மட்டுவில், திங்கள்

"சங்கீதக்கலையை தன் வாழ்க்கையாகத் தான் கற்றது என்று கருதாது கற்ற இசைக்கலை மூலம் இறைவனைப் புகழ்ந்து பாடுவதுடன் ஆலயத் தொண்டுகளும் செய்து ஆத்ம வளர்ச்சியை நாடுவதுடன் இந்த நாட்டு மக்களுக்கும் பயன்படும் வகையில் வளர்த்துக் கொண்டிருக்கும் திருமதி பூமணி இராஜரத்தினத்திற்கு 'இன்னிசை அரசி' என்று தொண்டை மண்டல மெய்கண்டார் ஆதீனம் பட்டமளித்தது மிகவும் பொருத்தமானது."

இவ்வாறு தொண்டை மண்டலம் மெய்கண்டார் ஆதீன குருபீடம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் சந்நிதானம் வழங்கிய பட்டமளிப்பு சான்றிதழ் அளிப்பு வைபவத்தில் பேசிய சைவத் திருமணி சித்தாந்தச் செம்மல் சங்கீதபூஷணம் கலைமாமணி சி. விருத்தம்பி குறிப்பிட்டார்.

இச்சான்றிதழை பிரம்மஸ்ரீ வை. மு. குமாரசாமிக்குருக்கள் வாழ்த்தி வழங்கினார். சங்கீதபூஷணம் தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது:

கலைகளை வளர்க்க அவளும் பலரும் உழைப்பவர்களே ஆனால் அவர்கள் மத்தியிலே பொது நலக்கொள்கை தெய்வீகசிந்தனை ஆகிய உயர்ந்த பண்புகள் தான் குடியிருக்க வேண்டுமேதவிர சுயநலக் கொள்கைகள் குரோத மனப்பான்மைகள் இருக்கக் கூடாது. அப்படி இருக்குமாயின் இப்படியான அரும்பெரும் கிட்ட முடியாது என்பதற்கு சங்கீதபூஷணம் இன்னிசை அரசி திருமதி பூமணி இராஜரத்தினம் ஒரு எடுத்துக்காட்டாகும் என்றார்.

மெய்கண்டார் ஆதீனம் குருமகா சந்நிதானம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் செ. சிவஞானத்தைப் பாராட்டி அவருக்கும் 'சித்தாந்தச் செம்மல்' என்ற ஒரு கௌரவப் பட்டத்தையும் வழங்கிய சான்றிதழை அனுப்பி வைத்தார். அச்சான்றிதழையும் பிரம்மஸ்ரீ வை. மு. குமாரசுவாமிக் குருக்கள் முருகன் சந்நிதானத்தில் வைத்து வழங்கினார்.

சங்கீதபூஷணம் விருத்தம்பி அவரையும் தமிழ்க்கலைஞர் கவிபுலவர் பாலசந்திரன் திரு. கே. வழிநிலையையும் பெரிதும் பாராட்டினார்.

# திருமலை துறைமுகத்தை சீனு கேட்கவில்லை

## வதந்திகளுக்கு மறுப்பு

புதுடில்லி, ஜூலை 24

"மண்டல சார்பற்ற கொள்கையிலும் இந்து சமுத்திரப்பிரதேசத்தை அமைதிப்பிரதேசமாக்க வேண்டும் என்ற கொள்கை பிழும்பிடுத்த இலங்கை அரசாங்கம் ஒரு அணுவளவேனும் பிசகமாட்டாது"

புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு கூறித்து வெளியிட்டுள்ளது.

இலங்கை மக்கள் சீனக் குடியரசு நட்புறவு குறித்து இந்தியப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளுக்கு மறுப்புத் தெரிவித்தே மேற்படி அறிக்கையை இலங்கை தூதரகம் வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இலங்கை-சீன உறவு பற்றி சமீபத்தில் இந்தியப் பத்திரிகைகள் வெளியிட்ட கருத்து தவறானதாகும். திருக்கோணமலையில் தளம் நிறுவுவது பற்றி சீனக்குடியரசு இலங்கை அரசாங்கத்தைக் கேட்கவில்லை. இதை இந்திய மக்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறோம். விமானசேவைக்கு இலங்கை அரசிடம் சீன அரசு எந்த விதமான வசதிகளையும் கேட்கவுமில்லை. விமான போக்குவரத்துசேவைகளில் வழமையாக ஏனைய நாடுகளுக்கும் செய்துவரும் உதவியையே இலங்கை செய்துவருகிறது.

# கதிரமலை காணுத கண்ணென்ன கண்ணே!

— க. வருணநாதன் —

குன்றிலாடும் குமரனுக்கு குறிப்பாக அமைந்த நிலம் குறிஞ்சி. அந்நிலத்தில் அமர்ந்து முருகன் அடியார்களுக்கு அனுபவிக்கக்கூடிய விப்பான். அம்மலைகளுடன் மருவி அவர் மனம் களிக்க அருள்தந்தருள்வான்.

இவ்வாறமைந்த ஆறுபடை வீடுகளில் அமர்ந்து அடியார்க்கு அருள் பாலிப்பது போல ஈழமணித்திருநாட்டின் தென்பாலுள்ள கதிர்காமம் என்னும் தலத்திலும் அமர்ந்து அருள் பாலித்து வருகிறான். கதிர்காமம் என்பது நிலை நிறைந்த கிராமம் எனப் பொருள்படும். முருகன் வள்ளியை மணம் செய்த இடம் எழுந்தருளி...

அங்கு நடைபெறும் காலட்சேபம் கவின்மிகு காட்சி தரும் இத்தகைய சிறப்பினை எவ்வுலகிலும் காண்டல் அரிது. அடியார் வினை வெல்லும் அவன் வேல் கட்டழியும். எந்நிலையிலும் அடியார் இடர்களை முன்னிற்பான். "நினைச்சிங்கடியில் எம்பெருமான் எந்த நேரத்திலும் கோலக்குறத்தியுடன் வருவான் குருநாதன் சொன்ன சேதியை மெய்யாக தெளிந்தறிவார் சிலரோ சிலரே காலத்தை வென்றிருப்பார் மயிலேறும் ஐயன் பெருமானாயிலே."

காட்டு வழிகளின் மத்தியிலேயுள்ள கவின்மிகு கதிரமலை மீது அடியார்கள் அரகரோகரா...

ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும் முருகா வென்றோதுவார் முன்

# பத்திரிகையாளர் வேலை நிறுத்தம்

கராச்சி, ஜூலை 24

பாகிஸ்தானிலுள்ள பத்திரிகையாளர்கள் 24 மணிநேர வேலைநிறுத்தம் ஒன்றினை நடத்தியிருக்கிறார்கள். கராச்சியிலுள்ள பத்திரிகையொன்றை அரசாங்கம் தடை செய்ததை ஆட்சேபித்து இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

கராச்சியிலுள்ள வேறு சில பத்திரிகைகளுக்கு காரணம் காட்டும்படி விடுக்கப்பட்டுள்ள உத்தரவுகளையும் இந்தப் பத்திரிகையாளர்கள் ஆட்சேபித்துள்ளனர்.

